# உடன்பிறப்பே, உன் இலட்சியப் பயணம் தொடரட்டும்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

நடைபெற்றது. முறையே அந்த மாநாடுகளை அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், தோழியர் பூங்கோதை அவர்களும் துவக்கி வைத்தார்கள்.

1959ஆம் ஆண்டு, நெல்லை மாவட்ட மூன்றாவது மாநாடு மே திங்களில் கே.வி.கே. சாமி பந்தலில், தாள முத்து அரங்கத்தில் அருமை நண்பர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையிலே நடைபெற்றது. நான் எழுதி, நடித்த உதய சூரியன் நாடகமும் அந்த மாநாட்டில் நடந்தது.

1963ஆம் ஆண்டு, நெல்லையில் இந்தி எதிர்ப்பு மாநாடு நண்பர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில், நண்பர் ப.உ. சண்முகம் திறந்து வைக்க நடைபெற்றது.

1975இல் நெல்லை மாவட்ட ஐந்தாவது மாநாடு நண்பர் செ. கந்தப்பன் தலைமையிலும், நெல்லை மாவட்ட ஆறாவது மாநாடு 1980ஆம் ஆண்டு ஏ.வி.பி. ஆசைத்தம்பி பந்தலில் பண்பாளர் பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. இந்த மாநாட்டினை புதுவை முன்னாள் முதல்வர் டி. ராமச்சந்திரன் திறந்து வைக்க தங்கை எஸ்.பி. சற்குணம் கொடியேற்றினார்.

1998ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், கழகத்தின் பொன்விழா தொடக்க சிறப்பு மாநாடு இதே நெல்லையில்தான் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் பேராசிரியர், மாநாட்டினை திறந்து வைத்தார்.

உடன்பிறப்பே, ஒன்றிரண்டு மாநாடுகளைத் தவிர மற்ற மாநாடுகளில் தலைமையேற்றும், திறப்பு விழா நடத்தியும், கொடியேற்று விழா செய்தும், வீறு பாய்ச்சும் விரிவுரை, விளக்கவுரை ஆற்றிய கழக முன்னோடிகள் பலர் இன்றைக்கு இல்லை. ஆனால் அவர்கள், ஏற்றி வைத்த இரு வண்ணக் கொடி நிழலும், அவர்கள் ஆற்றிய இன எழுச்சி உரைகளின் தாக்கமும் என்றும் நம் நினைவில் சுழன்றாடிக் கொண்டிருப்பவையாகும்.

இந்த வரிசையிலேதான் தி.மு.க. இளைஞர் அணியின் மாநில மாநாடு நெல்லையில் நடைபெறவுள்ளது.

இத்தனை மாநாடுகளை சிறப்பாக நடத்திய திருநெல்வேலி மாவட்டப் பகுதிகளிலே கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டோர் பலர் உண்டு. தூத்துக்குடி எம். எஸ். சிவசாமி, உச்ச நீதி மன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் ரெத்தினவேல் பாண்டியன், கா.மு. கதிரவன், ஆலடி அருணா, புகழ் பெற்ற பத்திரிகையாளரும், நாம் தமிழர் இயக்கத்தை தோற்றுவித்து பின்னர் கழகத்திலே இணைந்து பேரவைத் தலைவராகவும், அமைச்சராகவும் பொறுப்பேற்று புகழ் பரப்பிய சி.பா. ஆதித்தனார், தினகரன் இதழை நிறுவிய திரு. கே.பி. கந்தசாமி, தூத்துக்குடி இரா. கிருஷ்ணன், இன்றைய சட்டப் பேரவைத் தலைவராக உள்ள இரா. ஆவுடையப்பன், இன்றைய மேயர் ஏ.எல். சுப்பிரமணியம், சங்கரன்கோவில் பழனிச்சாமி, ஜெயபாண்டியன், கருப்பசாமி பாண்டியன், சுப. சீத்தாராமன், தூத்துக்குடி இரா. ராமலிங்கம், தூத்துக்குடி பெரியசாமி, சவுந்தரபாண்டியன், கணபதி ராமசுப்பையா, கடையநல்லூர் ராஜாமணி, சங்கரன்கோவில் சுப்பையா, தங்கவேலு, ஜி.ஆர். எட்மண்ட், நெல்லை மஸ்தான், தம்பிதுரை, டாக்டர் பத்மநாபன், நெல்லை சூரியநாராயணன், பாளையங்கோட்டை உசேன், கோவில்பட்டி பெரியசாமி, கோவில்பட்டி தமிழரசன்,

விளாத்திகுளம் ரத்தினசபாபதி, தூத்துக்குடி தனசேகரன், மிசா ரெத்தினசாமி, ஆ. கருப்பையா, சங்கரன்கோவில் டி.ஆர். சுப்பிரமணியம், கேப்டன் நடராசன், தூத்துக்குடி அய்யாசாமி, புளியங்குடி பழனிச்சாமி, களந்தை ஜின்னா, நெல்லை மஜீத், நம்பி, தென்காசி திரவியம், கடையநல்லூர் சாகுல் அமீது, என்று இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு எண்ணற்ற திட்டங்களும், சாதனைகளும் நிறைவேற்றப் பெற்றன. அவற்றில் சிலவற்றையாவது இந்த நேரத்தில் நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கும்.

★ திருநெல்வேலி மாநகராட்சிக்கு முதல் தேர்தலை 1996 ஆம் ஆண்டில் நடத்திய பெருமை கழக அரசுக்குத்தான் உண்டு.

★ மாநகராட்சியின் மேயராக முதன் முதலாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த உமா மகேஸ்வரியை தேர்ந்தெடுத்த பெருமையும் கழக அரசுக்குத்தான் உண்டு.

★ வேய்ந்தான்குளம் பகுதியில் 6 கோடியே 90 இலட்ச ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம் அமைக்க கழக அரசில் அனுமதி வழங்கப்பட்டு, பின்னர் கட்டி முடிக்கப்பட்டது.

★ திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம் 1990ஆம் ஆண்டில் கழக அரசில் தொடங்கப்பட்டது.

★ 1996இல் நெல்லையில் புதிய சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டு, அதற்கு புதிய கட்டடம் கழக அரசினால் கட்டப்பட்டு, 3.10.2000 அன்று திறக்கப்பட்டது.

★ நெல்லை மாவட்டம் நெற்கட்டும்செவல் கிராமத்தில், 53 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் பூலித்தேவன் மாளிகை புதுப்பிக்கப்பட்டு, அங்கு பூலித்தேவன் சிலையும் அமைக்கப்பட்டு 28.12.1998 அன்று திறப்பு விழா.

★ 1970-ல் நெல்லை சந்திப்புக்கு அருகில் அய்யன் திருவள்ளுவன் பெயரால் ஈரடுக்கு மேம்பாலம். அப்போது அந்த நகராட்சி மன்றத் தலைவராக இருந்த மஜீத், அவர்களின் கடையை இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டபோதிலும், பொது நன்மை கருதி பெருந்தன்மையோடு அதனை விட்டுக் கொடுக்க முன்வந்ததும் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

★ திருநெல்வேலி நகரில், மதுரை - கன்னியாகுமரி புறவழிச்சாலையுடன் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 8 கோடி ரூபாய் செலவில் ஓர் உயர்மட்டப் பாலம்; 31.12.99 அன்று திறப்பு.

★ திருநெல்வேலி பாளையங்கோட்டையில், விரைவில் அமையவிருக்கும் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மேம்பாலத்திற்கு சட்டப்பேரவை முன்னாள் தலைவர் செல்லப்பாண்டியன் அவர்களின் பெயர் சூட்டப்படும் என்று, என்னால் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு, திருவேங்கடம், அம்பாசமுத்திரம், திசையன் விளை, ராயகிரி, அச்சம்புதூர், தச்சநல்லூர், ஆயக்குடி, பண்பொழி ஆகிய பகுதிகளில் குடிநீர் திட்டங்கள் 1996-2001 கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டன.

★ 6 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் பாளையங்கோட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம்

★ 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வாசுதேவநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம்

★ நம்பியாறு நீர்த் தேக்கத் திட்டம்: இதனால் இராதாபுரம் வட்டத்தில் உள்ள கோட்டைக் கருங்குளம், உருமான்குளம், இராதாபுரம், கரைச்சிட்டிபுதூர், கஸ்தூரி ரங்கபுரம், குமாரபுரம், முத்துமோதுமொழி, திசையன்விளை ஆகிய கிராமங்களில் மொத்தம் ஏறத்தாழ 706 எக்டேர் பாசன நிலம் பயனடைகிறது.

★ சர்குனியாறு பாசன மேம்பாட்டுத் திட்டம்: 36 இலட்ச ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு, 26,736 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறுகிறது.

★ ராமாநதி அணை பாசன மேம்பாட்டுத் திட்டம்: 85 இலட்ச ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு, 4,942 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறுகிறது.

★ குண்டாறு அணை பாசன மேம்பாட்டுத் திட்டம்: 80 இலட்ச ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு, 4,102 ஏக்கர் நிலம் பயன் அடைகிறது.

★ மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்களின் பெருமுயற்சியால், நாங்குநேரியில் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2100 ஏக்கர் பரப்பில் அமெரிக்கா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் தொழில் தொடங்க தேவையான அனைத்து அடிப்படை வசதிகளுடனும் உருவாக்கத் திட்டமிடப்பட்டு 11.2.2001 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டது. அந்த இடத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் முந்தைய அ.தி.மு.க. அரசு, இத்திட்டத்தைக் கிடப்பில் போட்டது.

★ எனினும் நாங்குநேரிக்கும், நல்ல காலம் இந்த ஆட்சியில் மீண்டும் பிறக்க இருக்கிறது. ஆம், தற்போதைய கழக அரசு இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்தும். பல்லாயிரக்கணக் கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

★ தூத்துக்குடி துறைமுகம்.

★ தூத்துக்குடி ஸ்பிக் உரத் தொழிற்சாலை.

★ கட்டபொம்மன் நினைவுக் கோட்டை.

★ கட்டபொம்மனின் வாரிசுகள் 204 பேருக்குக் குடியிருப்புகள்.

★ கட்டபொம்மனின் தளபதி வீரன் சுந்தரலிங்கம் நகர் உருவாக்கப்பட்டு, அவனது உறவினர் 200 பேருக்குக் குடியிருப்புகள்.

★ கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி இல்லம் நினைவுச் சின்னம்.

★ தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி.

★ தென்காசியில் அரசு கலைக் கல்லூரி.

★ தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் கட்டி திறக்கப்பட்டது.

★ தூத்துக்குடியில் இசைப் பள்ளி.

★ இவற்றுக்கெல்லாம் மேலாக, தமிழர்களின் நூறாண்டு கனவான சேது சமுத்திரத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதும் நம்முடைய முயற்சியிலேதான்.

உடன்பிறப்பே,

எழுச்சிமிகு நமது இளைஞர் அணியினர், நெல்லையில் நடத்தவிருக்கும் மாநில மாநாடு பற்றி, நேற்றும், இன்றும் நான், உனக்கு எழுதிய கடிதங்களில் மாநாட்டின் சாயல் எந்த மாவட்டம் முழுவதும் குற்றாலச் சாரலாக குளிர்ந்து வீசப் போகிறதோ, அந்த மாவட்டத்தின் பெருமைகளை யெல்லாம் தொகுத்து அளித்துள்ளேன். வெளிநாட்டவர் ஆயினும், ஒளிமிகு நமது தமிழ் மொழியை தமது தாய் மொழி போலக் கருதி, ஆய்வு நடத்தி, அரிய உண்மைகளை அவனிக்கு வழங்கியிருப்பதையும், வீரமும், தீரமும் கொண்டு வெற்றித் திருமக்களின் தலைவர்களாக நின்று, வெம்பகை வென்று, மானமும், மாண்பும் காத்த மண்ணின் மைந்தர்கள் குறித்தும், மடியிலிறுத்தி இரு கரங்களால் மார்புறத் தழுவி மழலைச் செல்வங்களைக் கொஞ்சுகின்ற மாதாவைப் போல் இந்த மாநாடு நடை பெற விருக்கும் மாவட்டமும் தருநிழலாய், குளிர் புனலாய் நம்மையெல்லாம் வரவேற்கக் காத்திருக்கிறது.

அதோ தெரிகிறதா?
அரிமா நெஞ்சர்களே!
அடலேறுகளே!
என் அன்புக்குரிய உடன்பிறப்புக்களே!

அன்றொரு நாள் "சென்று வா தம்பி! செறுமுனை நோக்கி!" என்று சிகப்பும், கறுப்பும் கலந்த இந்த இரு வண்ணக் கொடியை அண்ணா நம் கரங்களில் ஒப்படைத்து, களம்புகச் செய்தாரே! அந்தக் கொடியை அல்லவா வீராங்கனையாம் ஒரு தமிழச்சி மாநாட்டுப் பந்தல் முகப்பில் ஏற்றி வைக்கவிருக்கிறார்! அவர் தந்தை என் அருமைத் தம்பி தங்கப் பாண்டியன் அல்லவா? அவர் நெஞ்சில் மண்டியிருந்த மான உணர்வும், மட்டில்லா வீரமும், மாற்றார்க்கு தலை வணங்கா தீரமும் ஒரு மகளாக வந்து பிறந்ததென்று நாம் நினைத்து மகிழக் கூடிய செல்வி அவர்.

இளமை முதல் எனக்கு நண்பர் கடலூர் இளம்வழுதி. தில்லையில் நான் என் திருமணத்திற்காகப் பெண் தேடிச் சென்ற போது, மணமகனின் தோழராக இருந்தவர். நம்மிலே ஒருவராக, நம் குடும்பத்துப் பிள்ளையாகத் திகழ்ந்தவர். அண்ணாவின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அன்று எழுந்த கழக வளர்ச்சிக்கு அவர் ஓர் அரண். அவர் மகன் தம்பி இள. புகழேந்தி, எதிர்கால இளைஞர்களின் வளமான வளர்ச்சிக்கு என் நண்பர் விட்டுச் சென்றுள்ள உரம் போன்றான். அந்தத் தம்பி புகழேந்தி; "இனி இகழேந்தி வாழ மாட்டான் தமிழன்" என்று சூளுரைக்கும் சுயமரியாதை உரையாற்றி, மாநாட்டைத் திறந்து வைக்கிறார்.

சொல்லாற்றலால், சிங்க முழக்க பேச்சாற்றலால், தமிழர் சிந்தை அணு ஒவ்வொன்றிலும் சூடேற்றி சுற்றுலா நடத்தும் அருமைத் தம்பி பெரம்பலூர் ராசா, மாநாட்டினை ஒட்டி நடைபெறும் மாபெரும் அணிவகுப்பை தொடங்கி வைக்கும் தொண்டாற்ற வருகின்றார்.

நமது அண்ணா வளர்த்த இந்தக் கழகத்தின் அரும் புகழ், பரவிடும் அளவிற்கு அமெரிக்கா நாடு வரையிலே சென்று, நமது மூலக் கொள்கைகளின் முனை முறியாமல் முழங்கித் திரும்பியுள்ள அசன் முகமது, மொழி காக்கப் போரிட்டு தியாகத் திருவிளக்குகளாக மாறியுள்ள தி.மு.கழக இளைஞர்களின் திருவுருவங்கள் அமைந்த படத்தைத் திறந்து வைக்கிறார்.

கூடிக் கலைவதற்காக அல்ல இந்த மாநாடு!
பாடிக் களிப்பதற்காக அல்ல இந்த மாநாடு!
கொள்கைகளை முழங்குவதற்காக!
முழக்கம் கேட்டு இளம் தமிழர்கள் மயக்கம் தீர்ப்பதற்காக!
இதை உணர்ந்து உமது பங்கினைச் செலுத்திட
உமது பணிகளை ஆற்றிட

பல லட்சம்பேர் கூடிடும் - பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் திடலில் - பேரறிஞர் அண்ணா நகரில் - தம்பி மு.க.ஸ்டாலின் தலைமையில் நிறைவேற்றப்படும் மாநாட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றிடவும் - செயல்படுத்திடவும் உடன்பிறப்பே, உன் இலட்சியப் பயணம் தொடரட்டும்.

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 25.11.2007)

### ஜம்மு-காஷ்மீருக்கு விரைவில்

# மாநில அந்தஸ்து அளிக்க வேண்டும்!

## 370 சட்டப் பிரிவு ரத்து செல்லும்! உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

புதுடெல்லி, டிச. 13 -

ஜம்மு - காஷ்மீருக்கு விரைவில் மாநில அந்தஸ்து அளிக்க வேண்டும் என்றும், அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் சட்டமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கான 370 வது சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டதை உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கான 370 சிறப்பு அதிகார சட்டத்தை கடந்த 2019 ஆம் ஆண்டு பா.ஜ.க. அரசு நீக்கியது. அதனைத் தொடர்ந்து, ஜம்மு காஷ்மீர், லடாக் என்று இரண்டு யூனியன் பிரதேசங்களாக அம்மாநிலம் பிரிக்கப்பட்டது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் 23 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மீது தலைமை நீதிபதி டி.வை.சந்திரசூட், நீதி பதிகள் சஞ்சய் கிஷன் கவுல், சஞ்சீவ் கன்னா, பி.ஆர். கவாய், சூரிய காந்த் ஆகியோர் அடங்கிய ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசா ரணை நடத்தி நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் இந்திய ஒன்றியத்தில் இணைந்ததன் மூலம் அதன் முழு இறையாண்மையை ஒப்படைத்து விட்டதாக தெரிவித்த நீதிபதிகள், ஜம்மு - காஷ்மீரின் அரசியல் அமைப்பு இந்திய அரசியலமைப்புக்கு உட்பட்டது என்றும் கூறினர். மேலும், 370 சிறப்பு அதிகாரம் தற்காலிகமானது தான், நிரந்தர மான தல்ல என்றும் அறிவித்த நீதிபதிகள், ஒன்றிய அரசின் அனைத்து முடிவுகளையும் கேள்வி கேட்பது நாட்டில் குழப்பங்களையே ஏற்படுத்தும் என்றும் தங்களது தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

அரசியலமைப்பு சட்டத்தின் அனைத்து பிரிவுகளையும் ஒன்றிய அமைச்சரவையின் ஒப்புதலுடன் பயன்படுத்தும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு என்றும், இதற்காக மாநில சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறவேண்டிய தேவை இல்லை என்றும் தெரிவித்த நீதிபதிகள் ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் 370 சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டது செல்லும் என்றும் தீர்ப்பளித்தனர்.

மாநிலத்தின் பாதுகாப்பு பிரச்சினைகளை கருத்தில் கொண்டு ஜனநாயக முறையில் அங்கு ஆட்சி அமைய அடுத்த ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் சட்டமன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் ஒன்றிய அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும், ஜம்மு காஷ்மீருக்கு விரைவில் மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என தீர்ப் பளித்த நீதிபதிகள், லடாக் தனி யூனியன் பிரதேச மாக பிரிக்கப்பட்டது செல்லும் என்றும் தெரிவித்தனர். ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் நடந்துள்ள மனித உரிமை மீறல் பிரச்சினைகள் குறித்து விசாரணை நடத்த ஒன்றிய அரசு, ஆணையம் அமைக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு உத்தரவிட்டுள்ளது.

### மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட கனமழையால்

# பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு ரூ.17.60 கோடியில் நிவாரணப் பொருட்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.13-

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மிக்ஜாம் புயல் மற்றும் மழையினால் பாதிப்புகள் ஏற்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு உதவுவதற்கான ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு அறை ரிப்பன் கட்டடத்திலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் கடந்த 06.12.2023 முதல் இயங்கி வருகிறது. பல்வேறு மாவட்ட நிர்வாகங்களின் வாயிலாக பெறப்படும் நிவாராணப் பொருட்கள் வெள்ளத்தால் அதிக பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கு, தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட மாநகராட்சி மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மூலமாக விநியோகிக்கப் பட்டு வருகிறது.

இதுவரை 10,77,000 குடிநீர் பாட்டில்கள், 3,02,165 பிரெட் பாக்கெட்டுகள், 13,08,847 பிஸ்கட் பாக்கெட்டுகள், 73.4 டன் பால் பவுடர், 4,35,000 கிலோ அரிசி, 23,220 கிலோ உளுந்து மற்றும் சமையலுக்குத் தேவையான பொருட்கள் பெறப்பட்டுள்ளன. மேலும் 82,400 பெட்ஷீட்டுகள் மற்றும் லுங்கிகள், நைட்டிகள், பிளாஸ்டிக் பக்கெட்டுகள், குவளைகள், மெழுகுவர்த்திகள், தீப்பெட்டிகள், என ரூ.17.60 கோடி மதிப்பிலான நிவாரண பொருட்கள் 34 மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்கள், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகள், ஆவடி மற்றும் தாம்பரம் மாநகராட்சிகள், குன்றத்தூர் நகராட்சி ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், நிவாரணப் பொருட்கள் வழங்க ஏதுவாக பிரத்யேகமாக அறிவிக்கப்பட்ட whatsapp எண் மூலம் தோராயமாக ரூ.50 இலட்சம் மதிப்பிலான நிவாரணப் பொருட்கள் பெறப்பட்டு அவையும் தேவையான பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



திருவெறும்பூர் தொகுதி அருகே பெல் கைலாசபுரத்தில் பாய்லர் பிளாண்ட் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா சைக்கிள்கள் வழங்கும் விழா தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்து 253 மாணவர்களுக்கு விலையில்லா சைக்கிள்களை வழங்கி பேசினார். இதில் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) சங்கரநாராயணன், பள்ளி நிர்வாக அலுவலர் ரத்தினவேலு வாழ்த்துரை வழங்கினர். அப்போது உதவி தலைமை ஆசிரியர் வீராசாமி, ஆசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கூத்தைப்பார் ஊராட்சி மன்றத் தலைவர் செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு, திருச்சி முதன்மைக் கல்வி அலுவலர் கிருஷ்ணபிரியா வரவேற்றார். தலைமை ஆசிரியர் மணியரசன் நன்றி கூறினார்.



நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையத்தில் மாற்றுக்கட்சியிலிருந்து கட்டுமானத் தொழிலாளர்கள் 200 நபர்கள் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், நகர செயலாளரும், நகராட்சி தலைவருமான த.விஜய்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்வில் நகராட்சி துணைத் தலைவர் வெங்கடேசன், மாவட்டப் பொருளாளர் ராஜாராம், முன்னாள் நகரச் செயலாளர் செல்வம், தொழிலாளர் அணி துணைத் தலைவர் அழகேசன், துணை அமைப்பாளர் செந்தில்குமார், வர்த்தக அணி துணை அமைப்பாளர் பரமன் பாண்டியன் உள்பட பலர் பங்கேற்றனர்.